சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 1 | நாள் : 06.08.2024. | |
| அசல் வழக்கு எண். | 72/2023 | | |
| பெயர் | கௌதம் | த/பெ | பாஸ்கரன் |
| வயது | 31 | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | ராசிநகர் | தாலூக்கா | குத்தாலம் |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 13.07.2009 - தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 09.11.2020 - தாவா சொத்தை பொறுத்து வாதி, பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட கிரய சாசன எக்ரிமென்ட் ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.3 | 10.12.2020 - தாவா சொத்தை பொறுத்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட 09.11.2020 தேதிய கிரய ஒப்பந்தத்தில் 10.12.2020 தேதியில் வாதியிடமிருந்து, பிரதிவாதி மேற்படி கிரயத்தொகையில் ஒரு பாகமாக ரூ. 5,00,000/- பெற்றுக்கொண்டு கிரய ஒப்பந்தத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள வரவு குறிப்பு |
| வா.சா.ஆ.4 | 17.10.2023 - வாதி, பிரதிவாதிக்கும் மற்றும் சார்பதிவாளர் குத்தாலம் அவர்களுக்கும் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் (நோட்டீஸில் வழக்கறிஞர் கையொப்பம் இல்லை) |
| வா.சா.ஆ.5 | 20.10.2023 - வாதி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |